
12-வது பதினெண் சித்தர் பீடாதிபதி 11-வது பதினெண் சித்தர் பீடாதிபதி



மெய்ஞ்ஞானக்கொடி



இந்துமதத் தந்தை
குருமகா சன்னிதானம்
ஞாலகுரு சித்தர் கருவூரார்



தஞ்சைப் பெரிய
கோயிலைக் கட்டிய சித்தர்
காவிரியாற்றங்கரைக் கருவூரார்

# குருதேவர்

(காணிக்கை ரூ 1—00)

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை 12

(உறுப்பினர்களுக்கு மட்டும்) இ. ம. இ. பதிவு எண்: 185/83

## தேர்தல் அறிக்கை

**உண்மையான பத்தர்களே நாடாள வேண்டும்**

**பண்பாட்டுக் கழகம் நல்லாட்சி நாடி எடுக்கும் முடிவு**

‘இந்தியச் சமுதாய இயல்தான் இந்துமதம்’ [The Indianism is the Sociology of the India] என்ற பேருண்மையில் உருவான பண்பாட்டுக் கழகமே ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ ‘‘இந்து மதத்தின் மூலவர்களும், காவலர்களும் தமிழர்களே! இந்துமத நாற்றங்கால் தமிழ் மொழியே......’’ என்ற சித்தர் நெறியில் ஈடுபாடும், உண்மையான பத்தியுணர்வும் உள்ளவர்களே நாடாள வேண்டும்’’ என்பதே இ. ம. இ. யின் தத்துவம்.

எனவே, வரப்போகும் தேர்தலில் தக்கவர்களை ஆதரிக்க இ. ம. இ. முடிவெடுத்துள்ளது. கட்சி, சாதி, மத, இன வேறுபாடின்றி இ. ம. இ. யின் தத்துவத்திற்கு உகந்தவர்களுக்குத் தொகுதிவாரியாக ஆதரவு தரப்படும். இப்பொழுதே இ. ம. இ. யின் ஆதரவை விரும்பும் அனைத்துக்கட்சி வேட்பாளர்களும் ‘‘இவ்வறிக்கைப் பொறுப்பாளருக்கு விண்ணப்பிக்கலாம்.

இ. ம இ யின் தலைமை உரிய காலத்தில் பெரிய அளவில் ஆய்வுகள் நிகழ்த்தி தக்காருக்கு ஆதரவு நல்கி நல்லாட்சி உருவாகிடப் பெரும்பணியாற்றிடும். ஏனெனில் இ. ம. இ. ஒரு பண்பாட்டுக்கழகம்; இது. எந்த அரசியல் கட்சியின் சார்பையும் உடையதல்ல, இது நல்ல தனிமனிதர்களைத் தேர்ந்தெடுத்து ஆதரவு தரும்.

நல்லாட்சி அமையட்டும்! அருளாட்சி மலரட்டும்!!

தலைமை பொறுப்பாளர்: சி. கவிக்குமார் B. Sc.,
56, N. G. O. காலனி, பொன்னேரி-601204.

# விநாயகர் - பிள்ளையார் ≠ கணபதி

('ஞாலகுரு சித்தர் கருவூரூர்' அவர்களின் நினைவிலும் ஏட்டிலும் உள்ள குறிப்புகளிலிருந்து சிலவற்றை ஆராய்ச்சிக்கும், சிந்திப்பதற்கும் தருகின்றோம்.)

பதினெண் சித்தர்களின் இந்துமதப்படி விநாயகர் — வினையின் நாயகர் = வினைகளின் தலைவர் = செயல்கள் அனைத்துக்கும் ஆரம்பமானவர். பிள்ளையார் — பிள்ளை + யார் = பதினெண் சித்தர்களின் ஆராய்ச்சிச் சோதனைகளால் சாதிக்கப்பட்ட சாதனைகளிலேயே பிள்ளையார் அனைவருடைய கேள்விக்கும், ஐயத்துக்கும் உரியவராவர்.

இன்றைக்கு நாட்டு நடப்பில் மனித உடலும் யானைத்தலையும் உடைய பிள்ளையார், விநாயகர், வணங்கப்படுவதுதான் இயல்பாகவும், சிறப்பாகவும் இருக்கின்றன ஆனால், மனிதத் தலையும், யானை உடம்பும் உடைய கணபதி பற்றி யாரும் தெரிந்து கொள்ளவே இல்லை. இதைப்பற்றி மறையாக குருபாரம்பரியச் செவிவழிச் செய்தியாக எண்ணற்ற செய்திகள் இருக்கின்றன. இவற்றினடிப்படையில்தான் இந்து மதத்தின் தந்தை, அல்லது இந்து மதத்தின் கரு, குரு, தரு, திரு, மூலம், அனாதி, ஆதி......என்பன அனைத்துக்கும் உரியவர்கள் பதினெண் சித்தர்களே என்ற பேருண்மை நிலைநாட்டப்பட்டு வருகிறது எனவேதான் கணபதி, விநாயகர் பிள்ளையார் என்ற மூன்று சொற்றொடர்-களுக்கிடையேயும் உள்ள பேருண்மைகளை இதுவரை வெளிப்படையாக விளக்கிடாமலேயே இருந்து வருகிறார்கள் பதினெண் சித்தர்கள்.

மனித உடம்பில் பிற உயிரினங்களின் தலையைப் பொருத்தியும்; பிற உயிரினங்-களின் உடம்பில் மனிதத் தலையைப் பொருத்தியும் பதினெண் சித்தர்கள் நிகழ்த்திய அறுவை மருத்துவ ஆராய்ச்சியின் முடிவுதான் இந்து மதக் கடவுள்களின் பட்டியலில் மனித உடலோடு கூடிய பல்வேறு வகையான உயிரினங்களின் தலையையும், பல்வேறு உயிரினங்களின் உடம்பில் மனிதத் தலையையும் உடைய வழிபடு நிலையினர் இருக்கின்றனர். இதுபற்றி பதினெண் சித்தர்கள் எழுதியுள்ள மருத்துவ நூல்களில் அரிய செய்திகள் நிறைய இருக்கின்றன

இன்றைய நிலையில் இந்து மதம் யாரால்? எப்பொழுது? ஏன்? எப்படி? எதற்காக? எங்கே தோற்றுவிக்கப்பட்டது? யாருக்குச் சொந்தம்? எந்த மொழிக்குச் சொந்தம்?... என்ற வினாக்களுக்கெல்லாம் விடையே இல்லை என்பது போன்ற ஆரிய மாயைகள் தோன்றிவிட்டன எனவேதான் அவசர அவசியம் கருதி கணக்கற்ற கோடி ஆண்டுகளாகக் கணபதி பற்றியும், விநாயகர்-பிள்ளையார் பற்றியும் இரகசியமாகக் காக்கப்பட்டுவரும் உலகளாவியப் பேருண்-மைகளில் மின்னல் கீற்றுக்கள் போல ஒருசிலவற்றை மட்டும் வெளியிட முன்வருகின்றோம்.

அனாதிக் காலந்தொட்டு பிள்ளையார், விநாயகர், கணபதிஎன்பவர்கள் அருளாட்சி நாயக நிலையில் இருக்கிறார்கள் என்பதே குருபாரம்பரிய வாசகம்.

பிள்ளையார், விநாயகர் என்ற இரண்டு பெயர்ச்சொற்களும் மனித உடலும் யானைத் தலையும் உடைய கடவுளைக் குறிக்கும். கணபதி என்ற பெயர் மனிதத் தலையும், யானை உடலும் உடைய கடவுளைக் குறிக்கும். (தொடரும்)

# குருதேவர்


[இ. ம. இயக்க அறிக்கை]



சொல்லடி நாயனுர் பெரியார் ஈ. வெ. ரா.



போத்தர் மோகன்தாசு கரம்சந்த் காந்தி



நவநாத சித்தர் காரல்மார்க்சு



ஞான சித்தர் ஆதி சங்கரர்

## வணக்கவுரை !

நமது இயக்கம் மற்றைய இயக்கங்களைவிட முற்றிலும் மாறுபட்ட ஒன்று என்பதை அனைவரும் உணர வேண்டும். ஏனெனில், நாம் முகம்மதிய மதத்தை உருவாக்கிய நபியையும்; கிறித்துவ மதத்தை உருவாக்கிய இயேசுவையும் சித்தர்கள் என்றே ஏற்றுப் போற்றி வருகின்ருேம் மேலும் இந்தியாவில் உள்ள பிற மதத்தினரும் 'இந்தியர்கள்' என்றே நாம் வலியுறுத்தி வருகின்ருேம்,

சில இந்துமதச் சங்கங்கள் நாடெங்கும் மதத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஒரே மொழி பேசி ஒற்றுமையுடன் வளரும் மக்களை பிரித்துத் துண்டாடி வருகின்றன. இத்தகையப் போக்கு எதிர்கால வளர்ச்சிக்குப் பேராபத்தை விளைவிக்கும். மேலும் இவ்வியக்கங்கள் வெறும் கதைகளைக் கூறியும்; புராணங்களைக் கூறியும் வளர்ந்து வருகின்றன இவற்ருல் இந்த நாட்டில் சமத்துவமோ, சகோதரத்துவமோ பொதுவுடமையோ மலராது, மலராது, மலராது, மலரவே மலராது. இதனை உருவாக்கும் வல்லமையும், கொள்கையில் வலிவும் பொலிவும் கொண்டது ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்களின் தலைமையை யேற்றுள்ள இந்து மறுமலர்ச்சி இயக்கமே! உணர்வோம்! செயல்படுவோம்.

—சி. கவிக்குமார்

அறிக்கை 12; வெளியீடு **26-11-84**

இ. ம. இ. பதிவு எண் 135/83

[பண்பாட்டுக் கழகம்]

இ,ம.இ; அ.வி.தி; க.வ.க; அ.ஆ.க; உ. ம. ஆ. கு. முதலியவற்றின் வட்டாரத் தலைவர்கள்.

தொடர்பு :


1. பரமாச்சாரியார்: **நெ. சேவுகன்**
   C/o. காதிவசுத்திராலயம்
   கொட்டாம்பட்டி, (P.O.)
   மதுரை-625 103.

2. பிறமாச்சாரியார்:
   **சி. கவிக்குமார் B. Sc.,**
   56, N. G. O. காலனி
   பொன்னேரி-601 204.

3. தெய்வீகாச்சாரியார் :
   **சோ. இரவீந்திரன்**
   C/o. சித்தர், E.S.I. செம்பியம்,
   பெரம்பூர், சென்னை-600 011.

# பயிற்சிப் பள்ளித் துவக்க விழா

4—11—84 ல் சென்னையைச் சேர்ந்த சூரப்பட்டு மதுரா மேட்டூர் கிராமத்தில் ஓகாசன, யோகாசனப் பயிற்சிப்பள்ளியை ஞானுச்சாரியார், குருதேவர் தலைவர், பன்னிரெண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம் ஞால-குரு சித்தர் கருவூரர் ஆரம்பித்துவைத்தார்.

உடலை பாதுகாப்பதற்குரிய பயிற்சி-களே யோகாசனம் உயிர், ஆவி ஆன்மா ஆகிய மூன்றையும் பாதுகாக்கும் பயிற்சி அளிப்பதே ஓகாசனம். குருவில்லாமலும் பயிற்சி செய்துக் கற்றுக்கொள்ளக் கூடியது யோகாசனம். குருவழிதான் பயிற்சிசெய்து கற்றுக் கொள்ள வேண்டுமென்பது ஓகாசனம், தொடு வர்மம், படு வர்மம் ஆகிய இரண்டுக்கும் உரியது யோகாசனம். மேற் கூறிய இரண்டோடு தொடாவர்மம் என்ற மூன்ருவதற்கும் உரியது ஓகாசனம், யோகாசனம் பொருளுலகிற்குரியது. ஓகாசனம் அருளுலகிற்குரியது யோகா-சனத்திற்கு மந்திரங்கள் தேவையில்லை. ஓகாசனத்திற்கு எண்ணற்ற வகையான மந்தர, மந்திற, தந்தர, தந்திற, ஏந்தர, ஏந்திற...அருள்மொழிகள் நிறைய உண்டு யோகாசனத்திற்கு ஆயுதப் பயிற்சிகள் கிடையாது. ஓகாசனத்திற்கு ஆறடி (6½), எட்டடி (8½), பத்தடி (10½) பிரம்புக் கொம்புகள்; மூன்று நடு விரல்களின் பருமனுள்ள மூங்கில் கோல்; மான்கொம்பு, ஆட்டுக்கிடாய் கொம்பு, எருமைக்கொம்பு, நீண்ட வாள், வலைந்தவாள், எறி கத்தி, குத்தும் வங்கி. வேல்கம்பு, ஈட்டி, சூலம், பட்டறுவாள்' திருகு (ஆக்கு)க் கம்பி, சுருள் கத்தி, மட்டக் கம்பு (அ) இரட்டைக் கத்தி, சங்கிலி (ஏழுபாகம், நாலுபாகம் இரண்டுபாகம்) வில், அம்பு, வளைதடி...... முதலிய பல வகையான ஆயுதங்களைப் பயன்படுத்தும் முறைகள் உண்டு. உண்டு. உண்டு. **ஆனுல் ஓகாசனக் கலை பயின்றவர்கள் உயிர் போகும் நிலை ஏற்படாமல் பிறரைத் தாக்கமாட்டார் கள். அல்லது குருவாணை கிடைக்-காமல் ஆயுதமெடுத்து போரிட மாட்-டார்கள்.** யோகாசனத்தால் இப் பிறவிக்-குரிய தோற்ற,ஏற்ற, இறக்க முடிவுகளைக் கூடத் தெரிந்துகொள்ள முடியாது. ஆனுல் ஓகாசனத்தால் முற்பிறப்பு, இப் பிறப்பு, மறு பிறப்பு முதலியவற்றினைத் தெரிந்துக் கொள்ளலாம், அத்துடன் உருவ அருவ, அருவுருவச் சித்திகளையும் பெறலாம். அனைத்துவிதமான சித்து விளையாடல்களைச் செய்தற்குரிய ஆற்றல்களையும் பெறலாம்.

ஓகாசனத்தால் கருவறை மூலவர்களு டனும், விண்ணவர்களுடனும் தொடர்பு கொள்ளலாம். இதனுல்தான் யோகாசனத் துக்கு உணவு கட்டுப்பாட்டு கூட இல்லை என்ற நிலையில் ஓகாசனத்திற்கு உணவு, மருந்து, விருந்து, மோகம், போகம்...... முதலிய அனைத்துக்கும் குறிப்பிட்ட கட்டுப் பாடுகளும், விதிமுறைகளும் இருக்கின்றன எனவேதான் ஓகாசனம் பயில்பவர் ஞானி யாக, தவசியாக, வேள்வி வல்லானுக...... படிப்படியாக நிறைமாற்றங்கள் பெற்று இறவாமையும், பிறவாமையும் பெறுகின்-றனர். யோகாசனம் எந்த இடத்தினும் செய்யப்படலாம். ஓகாசனம் அருள் ஊற்-றெடுக்கும் நிலையங்களின் தொடர்புள்ள இடங்களில் தான் செய்யப்படல் வேண்டும் ......என்பன போன்ற கருத்துக்கள் இராசி வட்ட நிறைவுடையார், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள்சன்னிதானம் இந்துமதத் தந்தை, குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர் அவர்களால் கூடியிருந்த அனைத்து தர, திற அவை-யினரும் புரிந்து கொள்ளும் வண்ணம் விளக்கியுரைக்கப்பட்டன.

சொற்பொழிவின் இறுதியில் அருள் நலம் வேண்டிப் பலரும் குருதேவரிடம் மந்திரித்துக்கொண்டார்கள். கூட்டத்திற்கு வந்திருந்த இளைஞர்களில் பலர் மேடைக்கு வந்து ஒலிபெருக்கியில் தங்களைச் சித்தரடி-யான்கள் என்று அறிவித்துக்கொண்டார்-கள். இவ்வாறு இந் நிகழ்ச்சி இனிதே நடைபெற்று முடிந்தது. இதுபோல் தமிழக மெங்கும் ஓகாசன. யோகாசனப் பள்ளிகள் நமது அருள் வழங்கு நிலையங்களோடு சேர்த்துத் துவக்கப்படவேண்டும் என்ற அறிவிப்பு வேண்டுகோளை இந்து மறுமலர்-ச்சி இயக்கத்தின் பாரம்பரியத் தலைவர் **குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர்கருவூரர்** அவர்கள்வெளியிட்டார்.

# அன்புள்ள சேவுகன்!

அன்புச் சேவுக!

எல்லோருடைய ஒத்துழைப்பும் ஆதரவும் எளிதில் கிடைத்துவிடும் என்று எதிர்பார்த்துப் பொதுநலத் தொண்டு ஆற்றிட இயலாது தேவையில்லாமல் பிறரின் தலையீடும், காழ்ப்பும், போட்டியும், பொருமையும், அறியாமையும் பொதுநலத் தொண்டர்களைத் திணறித் திக்குமுக்காடச் செய்திடும். அதிலும், எவரும் எளிதில் எட்டறிவாலோ பட்டறிவாலோ தெரிந்து கொள்ள முடியாதபேருண்மைகள் நிறைந்த அருளுலகில் தொண்டாற்றுவது என்பது எளிதல்ல!

இவ்வுலகில் விளாதிமீர் இலிச் இலெனினுக்கும், மாசேதுங்குக்கும் அடுத்து மூன்ருவது நிலையில் வைத்து எண்ணப்படும் மாபெரும் மார்க்சீயத் தத்துவமேதையால் முழுக்க முழுக்கப் பகுத்தறிவுப் போக்கிலும் விஞ்ஞானச் சூழலிலும், சீர்திருத்த நோக்கிலும் வளர்க்கப்பட்ட எமமையே......... நெருங்கிப் பழகுபவர்களில் கூடச் சிலர் மதவாதி, மடமைவாதி, மூடநம்பிக்கைக் காரன், பழமைவாதி, மந்திரவாதி, சோதிடன், உடுக்கையடிக்கிப் பூசாறி......என்று குறை கூறுகிருர்கள். யாம், மிகத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும், காலக் கணக்கிட்டு, வரலாற்றையும் இலக்கியத்தையும் துணையாக்கி...... எமது பணிகளுக்குரிய கொள்கை, செயல்திட்டம், குறிக்கோள் முதலியவைகளை எழுதியும், அச்சிட்டும், பேசியும், ஆயிரமாயிரம் இளைஞர் மூலம் செயலாக்கியும் கூடப் பிறரின் கேலியும், கிண்டலும், ஏளனமும், எதிர்ப்பும், ஒதுக்கலும், பதுக்கலும், நீக்கலும், இருட்டடிப்புமதானே பரிசாகக் கிடைக்கின்றன!

நண்ப! யாம், முறையாக மழலை மொழி பேசிய காலத்திலிருந்து எந்தையிடம் உலக வரலாறு, இலக்கியம், தத்துவம், மருத்துவம், பிறகலைகள்...... அனைத்தும் பாடம் கேட்டதோடு; உலகியல்படி விஞ்ஞானம் கணிதம் பயின்று இளங்கலைப் பட்டமும்; தமிழ் பயின்று முதுகலைப் பட்டமும்; அரசியல் சமுதாய இயல் பற்றி நாலாண்டுகளுக்குமேல் முழுநேர அரசு ஆராய்ச்சிமாணுக்கனக டாக்டர் பட்டத்துக்-கு உழைத்தும்; இன்று உலகியலோடு ஒட்டி உறவாட அரசுப்பணியில் பொறுப்போடு பணியாற்றியும் கூட...... எம்மைப் 'பூசை மணியாட்டும் பண்டாரப்பயல்' 'தேவாரம் திருவாசகம் ஓதித்திரியும் தேசிகன்' 'கோயில் சாப்பாட்டில் வாழும் குருக்கள்; 'மந்திரக்காரன்; 'குறிகாரன்; 'சுடுகாட்டுச் சூனியக்காரன்; 'மைவேலைக்காரன்' 'புராணப் பித்தன்' மத வெறியன்......... -என்றுதானே வெறுத்தும் மறுத்தும் பழித்தும் இழித்தும் பேசுகிருர்கள்

நண்ப! பதினெண் சித்தர்களின் வாக்குகளும் வாசகங்களும் எம் காலத்து மண்ணும் விண்ணும் இணையுமென்ற உறுதி வழங்கியிருப்பதால்தான்; யாம், பதினெட்டாண்டுப் பயிற்சிகளையும் பதினெட்டாண்டு முயற்சிகளையும் நிறைவு செய்ததோடு நிம்மதியாகக் குருமகா சன்னிதானமாகப் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடத்தில் அமர்ந்து போகியாகவும், யோகியாகவும் வாழ்ந்திடவில்லை, யாம், எமக்குக் கிடைக்கும் வசதி வாய்ப்பு, சூழல் ஆதரவு, ஏந்து, நட்பு, தோழமை......... முதலிய அனைத்தையும் பொதுநல நோக்கோடு பயன்படுத்தி 'அரசயோகி'யாக, 'அண்டபேரண்ட ஆதி சத்திகள் சன்னிதானமாக; இந்து மதத் தந்தையாக'...... உயர்ந்தோம் இன்று, தாமிரபரணியாற்றங்கரைக் கருவூரர் 'ஞானச்சாரியார்' என்று எம்மைப் போற்றி ஏற்றி அருளும் நிலையையும் பெற்றுள்ளோம். ஆனல், எம்மைநாடி வருபவர்கள் எமது அருளால் தங்களின் குறை, துன்பம் தொல்லை......... முதலியவற்றைத் தீர்த்துக் கொள்ளத்தான் வருகிருர்களே தவிர யாரும் ஞானத்தைத் தேடி வரவில்லை இதுதான் நம் மக்கள் நிலை ......புரிந்து செயல்படுக அன்பு ஞாலகுரு சித்தர் கருவூரர்

## 'தன்வந்திரி' தரும் பாரதக் காட்சிகள்

"........கண்ணன் தமது பதினெட்டாவது வயதில் பாமா வையும், 27-வது வயதில் ருக்மிணியையும் முறையாக மணந்தான். 81-வது வயதில் பாரதப் போருக்கு ஆயத்தமானன் 84-வது வயதில் கீதையை (காதையை) நீதியை அறத்தை, நெறியை தத்துவத்தை, சித்தத்தை போர்க்களத்தில் அருட்சினனுக்கு வழங்குவது மூலம் உலகுக்-கு வழங்கினன். தன்னுடைய முன்னெச்சரிக்கையற்ற செயல்களால் 120-வது வயதில் இறந்தான். போருக்குப் பின் கண்ணனின் சங்கிலிருந்து சங்காத்தம்மனும், சக்கரத்திலிருத்து சக்கரத்தம்மனும், புல்லாங்குழலிலிருந்து குழலி அம்மனும் அடுத்த பாரதப் போருக்காக விந்தியத்திற்கு தெற்கே தமிழ் கூறும் நல்லுலகமெல்லாம் பதினெண் சித்தர் மரபுப்படி தனித்தனியாக 48-க் கருவறைகளில் மூலவர்களானர்கள். கலி காலத்தில் இராசிவட்ட நிறைவுடையாராக பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி தோன்றும் பொழுது இவர்கள் முன்பு போல் ஒருங்கிணைந்து பாரதப் போர் செய்வார்கள்... ..." என்று எழுதியுள்ள குறிப்பு தன்வந்திரி முக்காலத்தையும் உணர்ந்து வாழ்ந்த சத்திநிலைச் சித்தியாளர் என்பதை விளக்குகிறது.

".........தன்வந்திரி, துரோணச்சாரியாரிடம் அவர் துரியோதனின் படைக்குத் தலைமைத் தாங்குவது தவறு எனக் கண்டித்து வாதிட்டிருக்கிறர். ஆச்சாரிய பீடத்தில் இருக்கும் அவர் தமது மாணுக்கர்களாகிய கௌரவர்களும், பஞ்ச பாண்டவர்களும் போரிட்டுக் கொள்ளும்பொழுது அதைக் தடுக்க முயல வேண்டும்; முடியா விட்டால் தானே ஒதுங்கி நடுநிலை வகிக்க வேண்டும்; அல்லது கண்ணனைப் போல் ஆயுதம் கையிலேந்தாமல் போரில் பங்கு பெறவேண்டும் என்று அறிவுறை கூறினர்.

அப்போது துரோணச்சாரியார் கருவூரர் வழிவந்த தன்வந்திரிக்கு ஆசிரியர் மாணவரை எப்படி நடத்துவதென்பது சிரிப்புக்கிடமாகும் என்று தாக்கினர். காரணம் ஏழாவது பதினெண் சித்தர் பீடாதிபதி கபாடபுரத்துக் கருவூரர் ஆச்சாரியாராகவும், ஆசாறியாராகவும் அனைத்துக்கும் குருவாகவும், குருபீடமாகவும் இருந்தும் கூட தன்னிடம் கலைகளைக் கற்க வந்த 'துணைமணியூர்' என்ற மாணக்கனை மிக மிகக் கடுமையாகக் கொடுமைப்படுத்த வில்லையா? என்று கேட்டார். அதற்கு தன்வந்திரி அவனுடைய கதையை முழுமையாகக் கூறி அவனுக்கு இறுதியில் 'அசுவினித் தேவர்களை' நேரில் அழைத்துத் தன்னை சரிசெய்து கொள்ளும் மந்திறத்தை வழங்கி ஆட்கொண்டிட்டாரே கபாடபுரத்துக் கருவூரர் அதுகூட உமக்குத் தெரியாதா? என்று கூறி எதிர்வாதம் செய்தார்.

துரோணச்சாரியார், 'கடைசிவரை கருவூரர் வழிவந்த தன்வந்திரி, கருவூரர் வழிவந்த கண்ணனையே கண்மூடித்தனமாகப் போற்றினர் என்றும், குருகுலத்தார் அனைவருமே கருவூரர் வழிவந்தவர்கள் தான் என்ற பேருண்மையை உணர்ந்து நடுநிலையில் செயல்படவில்லை' என்று குறை கூறிய படியேதான் மாண்டார். அதற்கு காரணம் தன்வந்திரிக்கு மருத்துவம் மட்டும் தான் தெரியும் என்று நினைத்ததுதான், —என்று தன்வந்திரி கூறுகிறர். இப்படி பலரைப் பற்றியும் தன்வந்திரி மிகத் தெளிவாகவும் நேரடியாகவும தனது கருத்துக்களை எழுதியுள்ளார்.

**இத்திருநாட்டில் மதப்புரட்சியே சமுதாயப் புரட்சி! அதுவே தனிநபர் விழிச்சி! அரசியல் எழுச்சி! மொழிச் செழுச்சி!**

# இறைச்சியும் இறைவனும்

'இறைச்சி' என்ற சொல்லுக்கே 'இறைவன்' 'தலைவன்' 'மேலோன்' 'முதல்வன்' 'மூலவன்' 'எல்லாமாக இருப்பவன்' 'எங்கும் நிறைந்தவன்' 'நிறைவை உடையவன்' 'முழுமை உடையவன்' ......என்று பல பொருள்கள் சித்தர்களின் நூல்களில் குறிக்கப்படுகின்றன.

'இறைச்சியுணவைப் படையலாகப் படைத்து இயவுளின் அருளைப் பெறுவதே இறைமை.' இறைமை ஆற்றலை வழங்கும் இறைவன் இறைச்சியுணவின் அவிர்ப்பலி-யின் தோன்றுவான்.

ஓமம், ஓகம், யாகம், யக்ஞம், வேள்வி, தவம், ஞானம், மாந்தரீகம் எனும் எட்டினையும் சூரிய குலத்தார் இறைச்சிப் படையலின் மூலமே சித்தி செய்வர்.

நேமம், நியமம், நிடதம், நிட்டை, சுருதி, ஆரணம், ஆகமம், மீமாம்சை, தாந்தரீகம், ஏந்தரீகம் எனும் பத்தினையும் சந்திர குலத்தார் இறைச்சிப்படையலின் மூலமே சித்தி செய்வர்.

பதினெண் சித்தர்களின் மேற் கூறிய பதினெட்டுப் பூசை முறைகளும் இறைச்சி யுணவுப் படையலின மூலமே இறைமை பெற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்-துகின்றன.

—இவையாவும் 'குருவாக்கு, குருவாசகம் குருபாரம்பரியம்'

---

# 'குருதேவரின்' அருட்பயணம்

அண்மையில் குருதேவர் நவம்பர் 20. 21, 22, தேதிகளில் மதுரை, திருச்சி மாவட்டச்சுற்றுப்பயணம் மேற்கொண்டார் மதுரை கொட்டாம்பட்டியிலும், கிருங்காக் கோட்டையிலும் 'இந்து மதத் தந்தை ஞாலகுரு சித்தர் கருவூரர்' ஆட்சியல், சமுதாயஇயல், சமயஇயல் பற்றி மிகத் தெளிவாக விளக்கினார். இந்தியாவிலுள்ள இந்து மதம்தான் அனைத்து முதலாளித்து வச் சுரண்டலுக்கும், வறுமைக்கும்......... மூலகாரணமாக இருக்கின்றது. இந்து மத மறுமலர்ச்சிதான இன்றைய இந்தியாவை இருளிலிருந்து மீட்டுத் தரும்'' என்பதை மக்கள் வெள்ளத்திற்கு விளக்கியுரைத்தார். 'ஊராளிப்பட்டி' என்னும் ஊரில் பொது மக்களுக்கு அருளுரையும், அருட்கணிப்பும் வழங்கப்பட்டன. நத்தம், சிங்கம்புணரி மக்கள்வேண்டுகோளையும் ஏற்று விரைவில் அப்பகுதிகளுக்குவருவதாக ஒப்புக் கொண்டார் அடுத்தமாதம்டிசம்பர் 8, 9, 10, தேதிகளில் காரைக்குடி, குன்றக்குடி திருப்பத்-தூர்......பகுதிகளுக்கு வர இசைவு தந்தார் அவ்வருட் பயணத்தில் கலந்து கொள்ள அனைவரையும் அழைக்கின்றோம்.

# திருத்தம்

குருகுலம்காரியேந்தல்பட்டியில்பருவபூசை செய்யும் நாட்களில் பிற அ. வி. தி. நிலையத்தினர் பருவப்பூசை செய்ய வேண்டாமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அந்நாளின் முன்போ பின்போ வைத்துக் கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள்.

# அமையப்போகும் அருளாட்சி பற்றிய அரிய செய்தி

## 'கல்கி' பிறப்பெடுக்க-செயலாற்ற இ. ம. இ. அமைக்கும் அருட்கருவறை

''...கி. பி. 1999-ஆம்ஆண்டு, முக்கடலும் சங்கமிக்கும் தென்னிந்திய தீபகற்பத்தைச் சேர்ந்த வியாழக்கிழமையைப் புனித தின மாகக் கொண்ட ஒரு இந்து இளைஞன் ஆசியாவையும்-ஐரோப்பாவையும் வென்று ஒரு குடைக் கீழ் கொண்டுவருவான். இந்து மதம் ஆட்சி செய்யும். முஸ்லீம்களும், கிருத் துவர்களும், கம்யூனிஸ்டுகளும் அவனிடம் அடங்கிவிடுவர். அவனுக்குஅமெரிக்காவும், ரஷியாவும் ஒன்று சேர்ந்து உதவும். சீன தேசமும், பிரான்ஸீம், இத்தாலியும் அவ னுடைய படைகளால் வெற்றி கொள்ளப் படும். பாரீஸ் நகரில் உள்ள ஈபில் கோபுரம் தரைமட்டமாகும். ரஷிய நாடு மார்க்ஸி யத்தை விட இந்துமதத் தத்துவங்கள் உயர்ந்தவை என்பதை உணர்ந்து கம்யூ னிஸத்தைக் கைவிடும் முதல் நாடாக இருக்கும்.

அப்படி எற்படும் இந்துப் பேரரசுடன் ரஷியா தொடர்ந்து நட்பு நாடாகவே இருக்கும்...... ஆசியா முழுவதும் அந்த இந்து வீரன் ஆட்சியின் கீழ் வரும். இந்தப் போர்களில் அவனுடைய படையில் 2,50,000 இந்துக்கள் மடிவர். அவன் சர்வாதிகாரியாக மாறமாட்டான். மக்கள் நலனைப் பாதுகாக்கும் அரசனாகவே இருப் பான்...'' நன்றி! **இதயம் பேசுகிறது**

(நவம்பர் 18-24, 1984)

[நாட்ரடாமஸ் எழுதிய செஞ்சுரிசு என்னும் நூலில்]

பெரிய மனிதர்களின் சிந்தனை ஒரே மாதிரியாயிருக்கும். அருளாளர்களின்அருட் கணிப்பு வருங்காலத்தை முடிவு செய்யும். (The declaration of the Divinators will decide the future without any crucial differences)

இம்மண்ணுலகைப் பற்றிய தோற்ற ஏற்றமாற்றசிதைவழிவுகள்...முதலிய அனை த்தையும்மிகமிகத் தெளிவாகவும், முறையா கவும், காலக்கணக்கீட்டு அடிப்படையிலும் விளக்கிடுபவர்களே பதினெண் சித்தர்கள்.

இவர்கள், மூன்று உகங்களிலும் தனியாட்சி செய்த தமிழினம கலிஉகம் 5100 வாக்கில் உலகந் தழுவிய அருட்பேரரசு ஒன்றினை அமைக்கும் என்று குருபாரம்பரியம், அரச பாரம்பரியம் இலக்கிய பாரம்பரியம் எனும் மூன்று பெரும் நூல்களில் குறிக்கின்றனர்,

பதினெண் சித்தர்களின் அனைத்து வகையானகணிப்புகளுக்கும், கலைகளுக்கும அறிவியல்களுக்கும விந்துவழி வாரிசாகவும் செயல்வடிவாகவும் வளர்ந்து வரும் ''பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி'' குருகுலங்கள், தவப்பள்ளிகள் ......முதலிய அனைத்து வகையான நிறு வனங்களையும் நிறுவி அருளுலகப் பயிற்சி களாலும் முயற்சிகளாலும் அருளாட்சி அமைவதற்குரிய முயற்சிகளை வளர்த்து வருகிறார்.

இவற்றிற்குதுணையாகபிரெஞ்சு நாட்டு அருளாளன் நாட்ரடாமசு (Nostra-damus) தன்னுடைய நூலில் 'செஞ்சுரிசு (Centurios) குறிக்கும் செய்தி சுருக்கம் மேலே தரப்பட்டுள்ளது.

இன்றைக்கு நாட்டு நடப்பில் உள்ள மடமைகளும், தேவையற்றவைகளும், பயனற்றவைகளும், சுரண்டல்களும், ஏமாற்றங்களும், முதலாளித்துவப் போக் குகளும் நிறைந்துள்ள ஆரிய மொழியும், வேதமும் ஆட்சி செய்யும் இந்து மதமல்ல பதினெண் சித்தர்களின் இந்துமதம்.

இன்றைய 'இந்துமதத் தந்தை' அருளை அனுபவப் பொருளாக வழங்கி இந்து மதத்தின் மூலம் அருளாட்சி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது முழுமையான வெற்றி பெறும் என்பதை இந்துக்கள் அனைவரும் உணர்ந்து ஒற்று மைப் படுவதற்கு முன் இந்து மதத்தின் மூலவர்களான தமிழர்கள் மொழிவழிச் சிந்தனையால் மதவழி ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் இணைப்பிற்கும், பிணைப்பிற்கும் தயாராக வேண்டும்!

# இலக்கிய பாரம்பரியம்

10-வது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரார் எழுதிய வாசகங்கள்.

கி. பி. 1772 இல் இ. ம. இ. யும் அ. வி. தி. யும் பிற அமைப்புக்களும் தோற்று வித்த சித்தர் கருவூரார் வழிவந்த கண்டப்ப கோட்டைச் சித்தர் ஏளனம் பட்டியார் உ. இராமசாமி பிள்ளை தொகுத்தளித்த கட்டுரைகளிலிருந்து எடுக்கப்பட்டவை,

1. இலக்கியம் என்பது மனிதனைத் தான், தனது குடும்பம், உற்றார், உறவினர் ஊரார், இனத்தார், மொழியார், நாட்டார் உலகத்தார் என்ற எல்லைகளைப் படிப்படியாக அடிப்படையாகக்கொண்டு சிந்தித்துக் கட்டுக் கோப்பாக வளரச் செய்திட வேண்டும்.

2. இலக்கியம்என்பது தனிமனிதனின் அகம்பாவம், ஆணவம், பேராசை, வெறி, தன்னலம், வஞ்சம், பழியுணர்ச்சி, சுரண்டலுணர்வு............முதலியவைகளை முளையிலேயே கிள்ளியெடுத்திடப் பயன்பட வேண்டும்.

3. இலக்கிய மென்பது எந்தத் தனி மனிதனும் அனுதையாக, பிச்சைக்காரனுக நோயாளியாக, வறியவனுகத் துன்புற்று அலைந்து திரியாத சமத்துவச் சகோதரத் தத்துவத் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை உருவாக்கிட உதவுவதாக இருக்க வேண்டும்.

4. இலக்கிய மென்பது அகப் பண்பாட்டையும், புற நாகரிகத்தையும் செம்மைப் படுத்துவதாக இருக்க வேண்டும்.

5. இலக்கிய மென்பது அரசியல் கடுமைகளையும் கொடுமைகளையும் சர்வாதி காரங்களையும் அநீதிகளையும் தடுத்து நிறுத்தி முறியடித்து நன்மை விளைவிக்கும் ஆற்றலை ஊற்றெடுக்கச் செய்வதாக இருக்க வேண்டும்

6 இலக்கியமென்பது சமுதாயத் துரோகிகளையும் விரோதிகளையும் கண்டித்தோ தண்டித்தோ உடனுக்குடன் திருத்தக்கூடிய சத்திகளை நாடு முழுவதும் பசுமையாகச் செழித்து விளைந்திடச் செய்ய வேண்டும்.

7. இலக்கிய மென்பது சமய மடமைகளையும் பயனற்றவைகளையும் தீமைகளையும் வேருடன் களையெடுக்கும் சத்திகளைக் காலங்கள் தோறும் தோற்றுவிக்கும் ஆற்றலுடையதாக இருக்க வேண்டும்.

8. இலக்கிய மென்பது மனித வாழ்வின் சுமைகளை இறக்கிவைக்கப் பேருதவி செய்வதாக இருக்க வேண்டும்.

9. இலக்கிய மென்பது மனிதனைச் சுறு சுறுப்பாகச் செயல்படச் செய்யச் சுவையூட்டுவதாக இருக்க வேண்டும்,

10. இலக்கிய மென்பது கடந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் இணைப்பதாக இருக்க வேண்டும்.

11. இலக்கிய மென்பது நிகழ் காலத்தை விளக்கி வருங்காலத்துககுரிய திட்டங்களை நிறைவேற்றும் வழி வகைகளையும் துணைகளையும், ஏந்துகளையும் நல்குவதாக இருக்க வேண்டும்

12. இலக்கிய மென்பது அருளுலக வாழ்வுக்கும் பொருளுலக வாழ்வுக்கும் நெருங்கிய இணைப்புக்களையும், பிணைப்புக்களையும், உறவுகளையும் பசுமையாக வளர்த்துக் காப்பதாக இருக்க வேண்டும்.

13. இலக்கிய மென்பது மொழிப்பற்று இனப் பற்று. இன ஒற்றுமை, இன உரிமை, இன விடுதலை, நாட்டுப் பற்று நாட்டுப் பண்பு, நாட்டு நாகரிகம், நாட்டுப் பாரம்பரியம், நாட்டுரிமை, நாட்டு விடுதலை...... முதலிய உணர்வுகளை விழிச்சி நிலையிலும் எழுச்சி நிலையிலும், முயற்சி நிலையிலும், உயர்ச்சி நிலையிலும், செழுச்சி நிலையிலும் காத்து வளர்த்திடவேண்டும்,

# சித்தர் இராமாயணம் (முகவுரையும், அறிமுகவுரையும்)

இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் பாரம்பரியத்தலைவர்களில் இரண்டாவதாக தோன்றியவரும்; மார்க்சீயத்திற்கு செயல் வடிவம் கொடுப்பதற்காக இரசியநாட்டில் புரட்சி மலருவதற்கு முன்னரே அறிவியல் மேதை திரு. எம். என். ராய் அவர்களுடன் சேர்ந்து உலகக் கம்யூனிச இயக்கம் (The International Communist Party) என்ற அமைப்பை நிறுவியவரும். இந்திய துணைக் கண்டத்தில் பகுத்தறிவுக் குடியரசுக் கட்சி (Radical democratic Party) என்ற அமைப்பின் மூலவர்களில் ஒருவராகவும் இருந்திட்ட காக்கா வழியன் பண்ணையாடி சித்தர் காகபுசுண்டர் ம. பழனிச்சாமிபிள்ளை அவர்கள் சித்தர் இராமாயணம் பற்றி எழுதியுள்ள முகவுரையும், அறிமுகவுரையும் என்ற கட்டுரைத் தொகுதிகளிலிருந்து ஒரு சில செய்திகளை மட்டும் சித்தர் இராமாயணம் வெளியிடுவதற்கு முன் இந்த ஏட்டில் வெளியிடுகிறோம்.

1 இந்தியத் துணைக் கண்டத்தில் அன்னியர்கள் அரசாண்டாலும் சரி இந்தியர்களே அரசாண்டாலும் சரி அரசியலின் மூலம் மக்களின் வறுமை, ஏற்றத்தாழ்வு, அறியாமை, அடிமையுணர்வு, வாழ்வியல் புரியாமை, மடமை...... முதலியவைகளை அகற்றிச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை அமைக்கவே முடியாது. ஏனென்றால் இது ஒரு பழம்பெரும் நாடு எல்லோரும் பழமையிலும் கண்மூடிப் பழக்க வழக்கங்களிலும் மூட நம்பிக்கைகளிலும், காட்டுமிராண்டித் தனமான கற்பனைகளிலும் ஆரிய சூழ்ச்சியால் வீழ்த்தப்பட்டுவிட்டார்கள் அதாவது நெடுங்காலமாகி பாழடைந்து இடிந்து கிடக்கும் ஒரு கட்டிடத்தை யார் வேண்டுமானாலும் மிக எளிதில் விருப்பப்பட்ட இடத்தில் விருப்பம்போல் இடித்து, கட்டிட அமைப்புக்களில் மாற்றங்கள் செய்து கொள்ள முடியும் அதை யாரும் கண்டு பிடிக்க முடியாது. யாரும் அதைப் பற்றி கவலைப்பட மாட்டார்கள்.

அதைப் போலத்தான் இம்மண்ணுலகின் பூர்வீகக் குடிகளான தமிழர்கள் இமய மலையும், இன்றைய வட இந்தியாவும் தோன்றிய பிறகு அனைத்து இடங்களிலும் பரவி, வாழ்ந்தார்கள். அதனால் அவர்கள் தங்களுடைய பண்பாட்டையும் நாகரீகத்தையும் கட்டுக்கோப்பாக பாதுகாக்க முடியாமல் போயிற்று இருந்தாலும் இவற்றைக்காக்கும் மிகச் சிறந்த சாதனமாக பதினெண் சித்தர்களால் வழங்கப்பட்ட சித்தர் நெறி எனப்படும் இந்துமதம் ஒரு சமுதாய இயலாக (The Induism is a Social science) இருந்து இந்துக்களின் நாடு என்ற பெயரில் இமயம் முதல் குமரி முனை வரையிலும் (முன்பு தென் இமய மலைவரை) பரவிக்கிடந்த நாடு இந்தியா என்று அழைக்கப்பட்டது. இந்த நாகரீகமும் பண்பாடும் சுமார் அரைக் கோடி ஆண்டுகளுக்கு மேலே பழமையுடையது. அதனால் இதனுடைய நுட்ப, திட்ப அமைப்புக்களும், சட்ட திட்ட கட்டுப்பாடுகளும் நெறிமுறைகளும் மரபுகளும், ஒழுகலாறும் காலத்தால் பழமையாகி பழுதுபட்டுவிட்டன, இவற்றையெல்லாம் அவ்வப்போது சரி செய்வதற்காகத்தான் பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோன்றுகிறார்கள் இவர்கள் ஏற்கனவே உள்ள எழுதப்பட்ட இலக்கியங்களையும், எழுதா இலக்கியங்களையும், புதுப்பித்தும் அவற்றின் அடிப்படையில் புதிதாக எழுதியும்தான் பண்பாட்டுப் புரட்சியை (Cultural revolution) செய்து தேவையான சமுதாய மாற்றங்களை (The social Changes) உருவாக்கி அதன் மூலமே அரசியல் சீர்திருத்தங்களையும் செய்திருக்கிறார்கள். அதாவது முழுமையான சமுதாய மாற்றத்தின் மூலமே அரசியல் சீர்திருத்தங்களை அல்லது செம்மைகளை அல்லது புதிய வடிவங்களை உருவாக்கியிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் வட ஆரியர்கள் மிகத்திறமையாக எழுதப்பட்ட இலக்கியங்களில் எல்லாம் எண்ணற்ற இடைச்செருகல்களைச் செய்து அவற்றை தங்களுடையவைகளாக மாற்றிவிட்டார்கள்.

11 வது பக்கம் பார்க்க

## சித்தர் இராமாயணம் (தொடர்ச்சி)

அதாவது வரலாறுகளையும், வரலாற்று நாயகர்களையும், நிகழ்ச்சிகளையும், தத்துவங்களையும், நூல்களையும், இடங்களையும் தங்களுடைய சமசுக்கிருத மொழி ஒலிநயத்துக்கும், ஏற்ப திருத்தி ஒரு மாபெரும் மாயையை கலக்கத்தை, குழப்பத்தை, இருட்டடிப்பைச் செய்துவிட்டார்கள் இவற்றை இரண்டு 10, 11 ஆகிய பதினெண் சித்தர் பீடாதிபதிகள் பெரிதும் முயன்றும் கூட அகற்ற முடியவில்லை. எனவே இந்தியாவில் செய்யப்படவேண்டியது மதச் சீர் திருத்தம், அதன் மூலம் செய்யவேண்டியது சமுதாயச் சீர்திருத்தம்தான், இதற்கு மத வழிப் புரட்சி மூலம் சமுதாயத்தின் முழு-மைப் புரட்சியை விளைவிப்பதுதான்.

இதற்கு முறையாகவும், நிறையாக-வும் இந்து மத புராணங்களும், இதிகாசங்களும், மதச் சாத்திறங்களும், பூசாவிதிகளும், முனிவர்கள், இருடிகள், ஞானிகள், தவசிகள், அந்தணர்கள், சித்தியாளர்கள் .........முதலியோர்களின் வரலாறுகளும், பதினெண் சித்தர்களின் நூல்களின்படி விளக்கப்பட்டாக வேண்டும், தெளிவாக எழுதப்படவேண்டும். அந்த முயற்சியிலே -யே இராமாயணத்தைப் பற்றிய பலஆரிய மாயைகளை, பொய்களை, திரிபுகளை, இருட்டிப்புக்களை வரலாற்றுப் பூர்வமாக வெல்லுவதற்காக இராமன் பிறப்பதற்கு முன்பிருந்தே தசரதனோடும், இராமனின் மாமனரான சனகரோடும் நெருங்கிப்பழகி குருபீடமாக வாழ்ந்த **யக்ஞவல்லி (யக்ஞவல்கியர்)** எழுதிச் சென்றுள்ள இராமாயணக் காலக் குறிப்புகளையும், அவருடைய வரலாற்றையும், அவருடைய காலத்துப் பெரிய மனிதர் பலர் பற்றிய வரலாற்றையும் இக் கட்டுரைத் தொகுதிகளில் எழுதுகிறேன். இவைதான் சித்தர் இராமாயணத்தின் முகவுரையாகவும் அறி-முகவுரையாகவும் இருந்து இராமாயணம் பற்றி பேருண்மைகளை விளக்கிடும்.

---

# குருபாரம்பரியம்

கி. பி. 785 இல் 11 வது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் முதலாம் விசயாலனுக்காக எழுதிய **குரு பாரம்பரிய வாசகம்**

1. இன்றைய தமிழர்களை உற்று நோக்கிச் சிந்தித்திடு! எல்லா மனிதர்களை-யும் போல் இம்மண்ணுலக அருட் பயிர்களுக்கு நாற்றங்கால் பயிராக உள்ள தமிழர்களே பேராசை, போட்டி, பொருமை தானென்ற அகம்பாவமும், ஆணவமும் விளைத்த ஒற்றுமையின்மை, மொழிப்பற்றின்மை, இனப்பற்றின்மை, நாட்டுப் பற்றின்மை........ முதலிய அழிவுக்குரிய இழிந்த பண்புகளைப் பெற்றிருப்பதைக் காணலாம். இவை, **இவர்களின் இயற்-கைப் பண்புகளல்ல; இவையெல்-லாம்** அன்னியர்களால் நன்கு திட்டமிடப் பட்டுச் சூழ்ச்சியாக தமிழர்களிடையே பயிர் செய்யப்பட்ட புதிய பண்புகளே! இவற்றையெல்லாம் திடீரென்று தடுக்கவோ! அகற்-றவோ முடியாது. ஆனல் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவு இளைஞர்களை இவ் வழிவுக்குரிய இழிந்த பண்புகள் இல்லாதவர்களாகத் தயாரிக்க வேண்டும். அப்படித் தயாரிக்கப்பட்டவர்களின் மூலமே நாடு தழுவிய சமுதாய மாற்றப் பணியைப் பண்பாட்டுப் புரட்சியின் மூலம் செய்யவேண்டும் அதற்கு மத வழிப் புரட்சிதான் உதவி புரிந்திடும்.

2. நாட்டில் பாலி மொழிக் களப்பிறர், பிராகிருத மொழிக் களப்பிறர், சமசுக்கிருதப் பல்லவர், சமசுக்கிருத வட ஆரியர் ...... முதலியோர் பல சிற்றரசுகளையும், பேரரசுகளையும் துண்டுத்துண்டாக அமைத்துத் தனியாட்சிகள் செய்கிறர்கள். சீனர், யவனர், சோனகர்......என்று வணிகர்கள் ஆங்காங்கே கடைகள் வைத்து நாடு

—தொடரும்

# ‘குருபத்தியே சித்திக்கு வழி’

[தொகுத்து வழங்குபவர் பரமாச்சாரியார் நெ. சேவுகன்]

ஒவ்வொரு அடியானும் சிறந்த அருளாளராகமாற முழுமையாகக் குருவழி பின்பற்றி ஒழுகுதலே சிறந்த வழியாகும் குருதேவர் அவர்கள் அவ்வப்போது அடியேனுக்கு உபதேசித்த, அருளிய அருள் மொழி வாசகங்களே இங்கு திருமந்திர ஓலை நாயகத்தின் அறிவிப்பாக அனைவருக்கும் அறிவிக்கப்படுகிறது. தொடர்ந்து இத்தலைப்பில் கட்டுரைகளும், விளக்கங்களும் வெளியிடப்படும். இதைப்படிக்கும் அடியான், அடியாள், அடியார்......அனைவரும் பத்தி, சத்தி, சித்தி, முத்தி நிலைகளில் உயர்வர்

*‘‘சித்தன் போக்கு சிவன் போக்கு’’* என்ற முதுமொழி, சித்தர்கள் வழியிலேயே முழுமுதற் பரம்பொருளும் செயல்படும் என்று விளக்குவதை நாமெல்லாம் உணரவேண்டும்.

‘‘ஊசி முனையில் நின்று கோடானு கோடிக்காலம் தவமிருந்தாலும்; உரிய குருவின்றி என் முனையளவு பயனும் ஏற்படாது-’’ என்பதனை ஒவ்வொருவரும் எண்ணியுணர்ந்து தெளிந்து செயல்பட வேண்டும்.

பொருளை மனிதன் சம்பாதிக்கலாம்.அதுவும் எவரும் எதைச் செய்தாவது எப்படியாவது பொருளீட்ட முடியும். ஆனால், முன்னையூழும் பின்னைவிதியும், நன்னெஞ்சமும். நம்பிக்கையும், உண்மை நாட்டமும், பணிவும், குருபத்தியுமே அருளை ஈட்டச் செய்வன. நினைத்தவரெல்லாம் அருளீட்ட முடியாது. எவர் எதைச் செய்து எவ்வளவு காலம் முயன்றாலும் அருளைப் பெற்றுவிடமுடியாது எல்லாம் அவன் செயலே — என்று இருப்பதே மேல்.

மனிதன் தனியாகப் பிறக்கிறான்; தனியாக இறக்கிறான் எனவே, ஒவ்வொரு உயிரும்தான் செய்யும் தன்மை திண்மைக் கேற்பவே இறப்புக்குப் பின் வாழ்வும்; மறு பிறப்பு வாழ்வும் பெறுகின்றன. இதனை உணர்ந்தால்; ஒவ்வொருவர் வாழ்விலும் நோய், பேய், பகை, நகை, நட்பு, அழுகை இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி...... முதலியன ஏன் ஏற்படுகின்றன? எப்படி ஏற்படுகின்றன? ............என்பதற்குரிய விடைகள், காரண காரியங்கள் விளங்கிடும் எண்ணெயும் திரியும் விளக்கில் இருந்தாலும் ஏற்றி வைத்திட நெருப்புச்சுடர்வேண்டுமென்பது போல்; எல்லாத் தரமும், திறமும் இருந்தாலும் குருவால் இட்டும், தொட்டும், சுட்டியும் விளக்கப்பெறுவோரே ஞானச்சுடர் பெற்றவராவர், ஞானச்சுடர், சிலருக்குள் அகல் விளக்காக எரிந்திடும் சிலருக்குள் காட்டுத் தீயாக எரிந்திடும்; பலருக்குள் மின்மினிப் பூச்சியின் ஒளியாகிடும். ஊனப் பிறவிகள் ஞான நெருப்புக்கு ஈரவிறகாகிடுவார்கள் இவர்களே தெய்வீக நிலைகளை ஏளனம் செய்யவும்எதிர்க்கவும் முற்படுவார்கள். ஈரவிறகால் புகைதான் மிகும். இந்த ஈவிரக்க மற்றோரால் பகைதான் மிகும்.

குருவின் உடல் தொட்டும், ஆடை தொட்டும், குற்றேவல்பட்டும், ஞானப் பார்வை பட்டும், சொல் கேட்டும், ஐந்து வகையாகப் பத்தர்கள் தோன்றுகின்றார்கள் இவர்கள், கடல் மட்டத்தில் ,நிலவுகால இரவுகளில் வாய் திறந்து திரியும் சிப்பிகள்; வெறும் பனித் துளிகளை இறைவனின் அன்பளிப்பாகப் பெற்று; அப்படி பனித்துளி பெற்றதும், வாய் மூடி மௌனிகளாகக் கடலின் அடித்தளம் சென்று கண்மூடிக் கடுந்தவம் செய்து; பெற்றிட்ட பனி நீரை ஒளியும் உறுதியுமிக்க முத்தாக மாற்றிடுவது போலச் செயல்பட்டுப் பதின்மூன்று வகையான அருளாளர்களாக மாறுகிறார்கள் அவர்கள் 1 பத்தர், ,2 பத்தியார் 3 புத்தர் 4 புத்தியார் 5 போத்தர் 6 போத்தியார் 7 முத்தர் 8 முத்தியார்

—தொடரும்

K V Sபிரிண்டர்ஸ், 10, தேரடி தெரு, பொன்னேரி.